**Dated : 17.02.2026** (நேரம் : காலை 11.10 மணி)

**MCOP. No: 45/2025**

**ம.சா. 1 திரு. அபிலேஷ்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை –**

விபத்து நடந்த சாலை ஒரே சமயத்தில் இருவாகனங்கள் செல்லக்கூடிய அகலமான சாலை என்றால் சரிதான். நான் அந்த சாலையில் இராமேஸ்வரத்தில் இருந்து இராமநாதபுரம் நோக்கி சென்றேன். நான் சாலையின் இடதுபுறமாக சென்றேன். என்னுடைய இருசக்கர வாகனத்திற்கு முன்பு வேறு வாகனம் எதுவும் செல்லவில்லை. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். விபத்து சமயம் எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அதனால் தான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மீது மோதிய வாகனம் எனக்கு எதிரே இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் நோக்கி வந்தது. அந்த வாகனம் இனோவா கார் ஆகும். அந்த வாகனம் அது வரும் திசையில் இடதுபுறமாக வந்தது என்றால் சரியல்ல, வலதுபுறமாக கோட்டை தாண்டி வந்தது. இரண்டு அடி தூரத்தில் நான் அதனை கவனித்தேன். நான் தான் எனக்கு முன்பு சென்ற வாகனத்தை முந்திச் செல்வதற்காக ரோட்டின் வலதுபுறமாக கோட்டை தாண்டி சென்றேன் என்றும், அதனால் எனது கவனக்குறைவு காரணமாகத்தான் விபத்து ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து நடந்து இரண்டு நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியாது. என் மீது தவறு இருந்ததால் தான் நான் விபத்து பற்றி காலதாமதமாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. விபத்தினால் வலது தோள்பட்டையிலும், தலையிலும் காயம் ஏற்பட்டது. விபத்து சமயம் நான் தலைக்கவசம் அணிந்து செல்லவில்லை

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.02.17 17:27:56 +0530

என்றும், அதனால் தான் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் தலைக்கவசம் அணிந்து செல்லாததால் தான் தலைக்கவசம் அணிந்திருந்ததாக நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 23.05.2024ம் தேதிக்கு பிறகு நான் தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் பூரணமாக குணமடைந்துவிட்டது என்றும், அதனால் தான் நான் தொடர் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எனக்கு எந்தவித ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் வேலை எதுவும் பார்க்கவில்லை என்றும், அதனால் தான் எனது வேலை மற்றும் வருமானம் சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த மனுவை தாக்கல் செய்யவில்லை என்றும், இந்த மனு நிலைக்கதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அதனால் 1ம் எதிர்மனுதாரர் மட்டும் தான் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் பல்வேறு தலைப்புகளில் மிகைப்படுத்தி இழப்பீட்டு தொகை கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.02.17 17:28:02 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.